**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**முன்னிலை :– திருமதி. P. கனிமொழி, L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி.

<u>2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ம் நாள் செவ்வாய்க் கிழமை</u>

<u>திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம் மாசி மாதம் 26 ம் நாள்</u>

TNMY09-004321-2022

**<u>சுருக்கு முறை வழக்கு எண். 1269/2022</u>**

| | | |
|---|---|---|
| புகார்தாரர் | : | மா. ஈழவளவன், 47/2022,<br>த/பெ மாரிமுத்து,<br>நெ.2/92, மெயின்ரேடு, அரிவேளூர்<br>குத்தாலம் தாலுக்கா. |

//எதிர்//

| | | |
|---|---|---|
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | : | 1. M/s. ரவி டிராவல்ஸ் சார்பாக<br>அதன் உரிமையாளர் M. ரவிராஜன்<br>அலுவலகம் கதவு எண்.25/12, ஏரிக்கரை சாலை, (Corporation Play Ground Opposite)<br>கோட்டூர், சென்னை – 600985.<br><br>2. ரவிராஜன்,38/2022,<br>த/பெ முத்துலிங்கம்,<br>கதவு எண்.18, பிளாட் நெ.25,<br>2வது மெயின்ரோடு, ஸ்ரீ லக்ஷ்மி நகர்,<br>வேளச்சேரி, சென்னை – 600042. |

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | குற்றம் சாட்டப்பட்டது | | எதிரி மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் | |
| 2. | குற்றம் குறித்து வினவப்பட்டது | | எதிரி மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் | |
| 3. | சம்பவம் நடந்த நாள் | | 02.10.2020 | |
| 4. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | | ––– | |
| 5. | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற | | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.10 13:16:27 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | விபரம் மற்றும் நாள் | | --- | --- |
| 6. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | | --- | |
| 7. | கு.வி.மு.ச. பிரிவு 251ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | | 13.06.2023 | |
| 8. | கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | | --- | |
| 9. | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | ம.சா.1 | 23.12.2022 | 07.10.2024 |
| | | | ம.சா.2 | 07.12.2024 | 13.12.2024 |
| | | | எ.ம.சா.1 | 19.08.2025 | 16.09.2025 |
| | | | எ.ம.சா.2 | 30.09.2025 | 28.10.2025 |
| | | | எ.ம.சா.3 | 18.11.2025 | 18.11.2025 |
| 10. | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | | 26.12.2024 | |

இவ்வழக்கு 23.12.2022 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு இருந்து வந்து, 24.02.2026–ஆம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. G.M. சுதாகர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சிவச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும்,



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.10 13:16:36 +0530

வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்...

**தீர்ப்புரை**

1. 2ம் எதிரியானவர், புகார்தாரரிடமிருந்து தனது டிராவல்ஸ் நிறுவன தொழில் தேவைக்காக கடந்த 02.10.2020ம் தேதியில் ரூ.7,00,000/–த்தை கடனாக பெற்றுக்கொண்டு புகார்தாரர் கோரும்போது திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டு ஒரு புரோநோட் எழுதிக்கொடுத்ததாகவும், மேற்படி கடன் தொகையினை கடந்த 25.07.2022ம் தேதியில் புகார்தாரர் திரும்ப கேட்டபோது எதிரி ரூ.7,00,000/– தொகை குறிப்பிட்ட காசோலை எண்.000168 என்ற எண்ணுள்ள கரூர் வைசியா வங்கி, தேனாம்பேட்டை கிளை காசோலையையும், வட்டித்தொகையாக ரூ.73,500/–ஐ ரொக்கமாகவும் கொடுத்துவிட்டு எதிரி எழுதிக்கொடுத்த புரோநோட்டை திரும்ப பெற்றுக்கொண்டதாகவும், மேற்படி காசோலையை புகார்தாரர் கடந்த 12.08.2022 அன்று புகார்தாரர் வங்கி கணக்குள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, எலந்தங்குடி கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்தபோது மேற்படி காசோலையானது " வங்கி கணக்கு முடித்துக்கொள்ளப்பட்டுள்ளது" என்ற காரணத்துடன் கடந்த 01.10.2022 அன்று திருப்பப்பட்டுள்ளதாகவும், மேற்படி விபரம் குறித்து புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 07.10.2022 அன்று எதிரிக்கு அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பை 2ம் எதிரி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியதாகவும், எனவே, எதிரிகள் தனது வங்கி கணக்கு முடித்துக்கொள்ளப்பட்டது என தெரிந்துக்கொண்டே புகார்தாரரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு மேற்படி காசோலையை கொடுத்ததால் எதிரிகள் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் கீழ் தண்டிக்கப்படவேண்டியவர் என எதிரிகள் மீது இந்த வழக்கை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில், தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார் மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மாற்று முறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றம்புரிந்திருக்கிறார் என போதிய முகநுட்ப ஆதாரங்கள் இருந்ததால் இந்த வழக்கானது மேற்படி பிரிவின் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அவருக்கு இந்த வழக்கின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 204ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.10 13:16:45 +0530

3. எதிரிக்கு போதிய காலஅவகாசம் கொடுக்கப்பட்டு குவிமுச பிரிவு 251ன் கீழ் எதிரியிடம் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138ன் கீழான குற்றம் குறித்து வினவியபோது எதிரி பொய் வழக்கு என மறுத்தார். அதன் பேரில் இந்த வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

4. புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. ம.சா.2 ஆக தமிழ்செல்வம் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார்.

5. ம.சா.1 தனது சாட்சியத்தில் புகார் மனுவில் கண்டுள்ள சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்து, 25.07.2022 தேதியிட்ட கரூர் வைசியா வங்கி, தேனாம்பேட்டை கிளைக்கான ரூ.7,00,000/−க்கான 1 வது எதிரியின் சார்பாக 2 வது எதிரியால் வழங்கப்பட்ட காசோலையின் அசல் ம.சா.ஆ.1 ஆகவும், 01.10.2022 அன்று காசோலை திருப்பப்பட்டதற்கான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, எலந்தங்குடி கிளையில் வழங்கப்பட்ட குறிப்பாணை அசல் ம.சா.ஆ.2 ஆகவும், 07.10.2022 தேதியிட்ட எதிரிகளுக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பின் அலுவலக நகல் ம.சா.ஆ.3 ஆகவும், 13.10.2022 தேதியிட்ட 2ம் எதிரி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பப்பட்ட உறையுடன் கூடிய அஞ்சல் ம.சா.ஆ.4 ஆகவும், 1ம் எதிரி 12.10.2022 அன்று அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான Track Consignment ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

6. புகார்தாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் படித்து காட்டி வினவியபோது எதிரிகள் புகார்தாரர் தரப்பு சாட்சி சொல்வது **பொய் சாட்சி** என்றும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க **உண்டு** என தெரிவிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் எ.ம.சா.1 ஆக 2ம் எதிரி ரவிராஜன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 சாண்றாவணங்களாக



KANIMOZHI Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.10 13:16:52 +0530

குறியீடு செய்யப்பட்டுள்ளன. எ.ம.சா.2 ஆக நன்மாறன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.3 ஆக ரகு என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார்.

7. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில், எதிரிக்கு எதிராக மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை புகார்தாரர் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளாரா? என்பதேயாகும்.

**தீர்வு:**

8. **இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதம் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.**

9. புகார்தாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், புகார்தாரரிடம் 2ம் எதிரி சுற்றுலா மற்றும் கார் டிராவல்ஸ் நிறுவனமான M/S ரவி டிராவல்ஸ் சார்பாக அதன் உரிமையாளர் என்ற முறையில் ரவிராஜன் தனது நிறுவன தொழில் தேவைக்காக கடந்த 02.10.2020 அன்று ரூ. 7,00,000/−த்தை கடனாக பெற்றார் என்றும், அந்த கடன்தொகையை புகார்தாரர் கேட்கும்பொழுது திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டு கடனுறுதி சீட்டு ஒன்றை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கடன் தொகையினை புகார்தாரர் எதிரியிடம் திரும்ப கேட்டபொழுது எதிரி தேனாம்பேட்டை கரூர் வைஸ்யா வங்கி காசோலை எண். 000168 என்ற காசோலையை ரூ.7,00,000/−த்திற்கு கொடுத்ததாகவும், வட்டிதொகையாக ரூ.73,500/− ரொக்கமாக கொடுத்துவிட்டு புரோநோட்டை திரும்ப பெற்றுக்கொண்டதாகவும், மேற்படி கடன் தொகைக்கு காசோலை பெறுவதற்கு புகார்தாரர் தயங்கியபோது 2ம் எதிரி உரிமையாளர் நிர்வகித்து வரும் தனது ரவி டிராவல்ஸ் நிறுவன வங்கி கணக்கில் காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகை உள்ளதாகவும், காசோலையினை வசூலுக்காக தாக்கல் செய்து கடன் தொகையை பெற்றுக்கொள்ளுமாறும் எதிரி தெரிவித்ததால் கடந்த 12.08.2022 அன்று புகார்தாரர் கணக்கு வைத்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி எலந்தங்குடி கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்ததாகவும், அந்த காசோலையானவது Account Closed என்ற குறிப்புடன் கடந்த 01.10.2022 அன்று திருப்பப்பட்டதாகவும், புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 07.10.2022 அன்று காசோலை திருப்பப்பட்டது குறித்தும், காசோலையில் கண்ட தொகையை கொடுக்குமாறும் எதிரிக்கு அறிவிப்பு



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.10 13:16:59 +0530

அனுப்பியதாகவும், அந்த வழக்கறிஞர் அறிவிப்பை 1வது எதிரி பெற்றுக்கொண்டதாகவும், 2வது எதிரி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பிற்கு எதிரி எந்த பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றும், எதிரி தனிப்பட்ட முறையிலும் நிறுவனத்தின் உரிமையாளர் என்ற முறையிலும் இந்த புகார்தாரரிடம் அளித்த காசோலையை தனது வங்கி கணக்கு முடித்துக்கொள்ளப்பட்டது என்பதை தெரிந்துகொண்டே புகார்தாரரை மோசடி செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் கொடுத்துள்ளதால் அவர் மாற்றுமுறை ஆவணச் சட்டம்பிரிவு 138ன் கீழ் குற்றம்புரிந்துள்ளதாகவும், அதனால் எதிரிக்கு தக்க தண்டனை அளிக்கும்படியும் கூறப்பட்டுள்ளது.

10. எதிரிகள் தரப்பில், புகார்தாரரின் சகோதரி விஜயலெட்சுமியின் வளர்ப்பு மகன் எதிரி ரவிராஜன் ஆவார் என்றும், அந்த அடிப்படையில் புகார்தாரர் தனது எதிர்வீட்டில் உள்ள பெண்ணை ரவிராஜனுக்கு அவரது முன்னிலையில் திருமணம் செய்து வைத்துள்ளதாகவும், 2ம் எதிரி சென்னையில் உள்ளதால் திருமண செலவிற்காக புகார்தாரரிடம் ரூ.10,00,000/-ம் கொடுத்துள்ளதாகவும், திருமணம் முடிந்த பின்னர் எதிரி புகார்தாரரிடம் திருமண செலவு பற்றி கணக்கு கேட்டபொழுது புகார்தாரர் எதிரியின் மேல் கோபம் கொண்டு சென்னைக்கு வந்து எதிரியை அடியாட்கள் துணையுடன் அடித்து உதைத்து சிசிடிவி கேமராக்களை உடைத்து சேதப்படுத்தி எதிரி வீட்டில் இருந்த தொகைகள், காசோலைகள் மற்றும் இதர பொருட்களை அபகரித்து சென்றுள்ளார் என்றும், எதிரியின் வளர்ப்பு தாய் விஜயலெட்சுமி உறவுமுறை, குடும்ப கௌரவம் காரணமாக எதிரியிடம் புகார்தாரர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என திட்டவட்டமாக கூறியதால் எதிரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், கடந்த 12.08.2022 அன்று புகார்தாரர் வங்கியில் வசூலுக்காக காசோலையை தாக்கல் செய்துவிட்டு கடந்த 01.10.2022 அன்று காசோலை திருப்பப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். உண்மையில், புகார்தாரர் தனது தொகையை எதிரிக்கு கொடுத்திருந்தால் அவரது ஊரில் உள்ள வங்கிக்கு 12.08.2022 அன்றோ அல்லது மறுநாளோ சென்று கேட்டிருப்பார் என்றும், 49 நாட்கள் கடந்து மேற்படி தொகையை பற்றி வங்கியில் கேட்டதாக சொல்வது சரியல்ல என்றும், புகார்தாரரிடம் எதிரி எந்தவொரு கடன் தொகையும் பெறவில்லை என்றும், அதற்காக காசோலை எதுவும்



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.10 13:17:07 +0530

கொடுக்கவில்லை என்றும், அடியாட்கள் துணையுடன் அடித்து உதைத்து அவர் தொழிலுக்காக கையெழுத்து செய்து வைத்திருந்த காசோலையையும் மற்றும் வங்கி கணக்கு முடிந்துபோன காசோலைகளையும் பொருட்களையும் எடுத்து சென்று இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே எதிரிகள் மீது தாக்கல் செய்துள்ள இந்த வழக்கினை தள்ளுபடி செய்யுமாறும் கூறப்பட்டுள்ளது.

11. புகார்தாரர் இந்த வழக்கினை 2ம் எதிரியானவர் புகார்தாரரிடமிருந்து தனது டிராவல்ஸ் நிறுவன தொழில் தேவைக்காக கடந்த 02.10.2020 அன்று கடனாக ரூ.7,00000/- பெற்றுக்கொண்டு புகார்தாரர் கேட்கும்போது திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டு புரோநோட் எழுதிகொடுத்ததாகவும், கடந்த 25.07.2022 அன்று புகார்தாரர் எதிரியிடம் மேற்படி கடன் தொகையை திரும்ப கேட்டபொழுது எதிரி 25.07.2022 தேதியிட்ட ரூ.7,00,000/–த்திற்கான கரூர் வைஸ்யா வங்கி, தேனாம்பேட்டை கிளையின் காசோலையையும், வட்டி தொகையாக ரூ.73,500/– ரொக்கமாகவும் கொடுத்ததாகவும், மேற்படி காசோலையை புகார்தாரர் 12.08.2022 அன்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கி எலந்தங்குடி கிளையில் வசூலுக்காக செலுத்தியபொழுது எதிரியின் வங்கி கணக்கு முடித்துக் கொள்ளப்பட்டுள்ளது என கடந்த 01.10.2022 அன்று திருப்பப்பட்டதாகவும், மேற்படி காசோலை திருப்பப்பட்டது குறித்து எதிரிக்கு 07.10.2022 அன்று அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டு தொகையை தர மறுத்துள்ளதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் கீழ் குற்றம்புரிந்துள்ளதாக தனது புகாரினை முன்னிட்டுள்ளார்.

12. புகாரில் கண்டுள்ள பொருண்மைகளை நிரூபிக்கும் பொருட்டு புகார்தாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டுள்ளார். மேலும், வழக்குடன் தொடர்புடைய காசோலை ம.சா.ஆ.1 ஆகவும், வங்கியின் திருப்புதல் குறிப்பாணை ம.சா.ஆ. 2 ஆகவும், 07.10.2022 தேதியிட்ட எதிரிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.3 ஆகவும், 1ம் எதிரி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான Track Consignment ம.சா.ஆ.5 ஆகவும், 2வது எதிரி மேற்படி அறிவிப்பை



KANIMOZHI Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.10 13:17:15 +0530

பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய உறையுடன் கூடிய அஞ்சல் ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

13. மேற்படி ம.சா.1 ன் வாய்மொழி சாட்சியத்தை ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 உடன் இணைத்து பரிசீலனை செய்கையில் இந்த வழக்கு காசோலை எதிரியின் வங்கி கணக்குடன் தொடர்புடைய காசோலை என்பதும், அது வங்கியில் பணமாக்க செலுத்தப்பட்ட பொழுது எதிரியின் வங்கி கணக்கு முடித்துக்கொள்ளப்பட்டுள்ளது என திருப்பப்பட்டது என்பதும் புலப்படுகிறது. மேலும், எதிரி தரப்பில் வழக்கின் காசோலை எதிரியால் பராமரிக்கப்படும் வங்கி கணக்குடன் தொடர்புடைய காசோலை என்பதும், அதிலுள்ள கையெழுத்து எதிரியின் கையெழுத்து என்பதையும் மறுக்கவில்லை.

14. புகார்தாரர் தரப்பில் 2ம் எதிரியானவர் காசோலையில் கண்டுள்ள தன்னுடைய கையெழுத்தை ஒப்புக்கொண்டுள்ளதால் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139ன் கீழ் எழுகின்ற சட்டப்பூர்வமான அனுமானத்தை புகார்தாரருக்கு ஆதரவாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் சட்ட விதி என்றும், மேற்படி விதியானது மாண்புமிகு உச்ச நீதிமன்றம் 2015( 2) MLJ Crl SC 605 மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ரெங்கப்பா --எதிர்-- மோகன் என்ற முன்தீர்ப்புகளில் எடுத்துரைக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

15. மேற்கண்ட மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட முன்தீர்ப்பின் பொருண்மைகளையும் சட்ட விதிகளையும் பரிசீலனை செய்கையில், எதிரியானவர் பிரச்சனைக்குரிய காசோலையில் உள்ள தன்னுடைய கையெழுத்தை ஒப்புக்கொள்ளும்போது தொடர்புடைய காசோலையானது சட்டப்படியாக செலுத்தப்படவேண்டிய கடன் தொகை மற்றும் பொறுப்புக்காக வழங்கப்பட்ட காசோலை என்று மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.10 13:17:23 +0530

139ன் கீழ் புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானித்துக்கொள்ள வேண்டும் என மொழிந்துரைத்துள்ளது.

16. இந்த வழக்கிலும் எதிரியானவர் இந்த வழக்கு காசோலை தன்னுடையது இல்லை என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும் மறுக்காததால் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 139ன் கீழ் எழுகின்ற சட்டப்பூர்வமான அனுமானத்தை புகார்தாரருக்கு ஆதரவாக முதல் நிலையில் உள்ளது என்பது புலப்படுகிறது.

17. மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139ன் கீழ் வழக்கின் காசோலை சட்டப்படியாக செலுத்தப்படவேண்டிய கடன் அல்லது பொறுப்பிற்காக வழங்கப்பட்ட காசோலை என அனுமானித்துக்கொள்ள சட்டத்தில் வழிவகை செய்திருந்தாலும் மேற்படி பிரிவின் கீழ் எடுத்துரைக்கப்பட்டுள்ள அனுமானம் மறுத்தளிக்கக்கூடிய அனுமானம் ஆகும். எனவே, சட்ட அனுமானத்தை மறுத்தளிக்கும் சுமை எதிரிக்கு மாற்றப்பட்டுள்ளது. எதிரி தன் மீதுள்ள சுமையை புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதன் மூலமாகவோ, சாட்சிய சான்றாவணங்கள் மூலமாகவோ மறுத்தளித்துள்ளாரா? என்பது குறித்து பார்க்கும்பொழுது எதிரி தரப்பில் வைக்கப்படும் வாதம் என்னவென்றால், எதிரிக்கு கடந்த 10.11.2019 அன்று வைத்தீஸ்வரன்கோவிலில் புகார்தாரர் தலைமையில் திருமணம் நடந்ததாகவும், அவரது திருமண செலவிற்காக புகார்தாரரிடம் ரூ.10,00,000/-ம் கொடுத்ததாகவும், திருமணம் முடிந்து 6 மாதங்கள் கழித்து தான் கொடுத்த பணத்திற்கு புகார்தாரரிடம் கணக்கு கேட்டதாகவும், அவர் கணக்கு கொடுக்கவில்லை என்றும், கடந்த 08.06.2021 அன்று அதிகாலை 03.30 மணியளவில் எதிரியின் வீட்டிற்கு புகார்தாரர் மற்றும் ராமு, பாரதி, அறிவழகன், கார்த்திகேயன் மற்றும் பெயர் தெரியாத சிலர் மொத்தம் 10 நபர்கள் வந்ததாகவும், எதிரி கதவை திறந்தவுடன் புகார்தாரர் எதிரியை சோபாவில் தள்ளி அடித்தார் என்றும், அவருடன் வந்தவர்கள் எதிரியை தாக்கிவிட்டு எதிரி அவரது அலுவலகத்திற்கு எடுத்துச்செல்லும் பையில் வைத்திருந்த எதிரி கையெழுத்து போட்டு வைத்திருந்த 5 (ஐந்து) காசோலைகள், பணம், எதிரி வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா, மெமரி கார்டு ஆகியவற்றை எடுத்துகொண்டு சென்றுவிட்டார் என்றும், அப்போது எடுத்துசென்ற காசோலைகளை வைத்து எதிரி மீது மோசடியாக இந்த



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.10 13:17:30 +0530

வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற வாதம் வைக்கப்பட்டுள்ளது. எதிரி மேற்படி கூற்றை நிரூபிக்கும் வகையில் எதிரி தன்னை எ.ம.சா.1 ஆக விசாரித்துகொண்டு சாட்சியம் அளித்துள்ளார். நன்மாறன் என்பவர் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் கடந்த 05.10.2019 அன்று மாலை 05.00 – 06.00 மணியளவில் எதிரி திருமணத்திற்காக புகார்தாரரிடம் அவரது வீட்டில் உறவினர்கள் முன்னிலையில் ரூ.10,00,000/–த்தை எதிரி புகார்தாரரிடம் தாம்பாளத்தில் வைத்து கொடுத்தார் என்றும், அப்போது தானும் அங்கு இருந்ததாகவும், கடந்த 10.11.2019 அன்று எதிரிக்கு வைத்தீஸ்வரன்கோவிலில் புகார்தாரர் தலைமையில் திருமணம் நடந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் எதிரியின் திருமண அழைப்பிதழ் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் புகார்தாரரின் தலைமையில் திருமணம் நடத்த இருப்பதாகவோ, அல்லது புகார்தாரரின் பெயரோ காணப்படவில்லை. மேலும் எதிரி புகார்தாரரிடம் ரூ.10,00,000/–ம் கொடுத்ததற்கான ஆவணங்கள் உள்ளதாக எ.ம.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனவே, எதிரி புகார்தாரரிடம் ரூ.10,00,000/–ம் கொடுத்தார் என்பதை எதிரி தரப்பில் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. புகார்தாரர் எதிரியை தாக்கிவிட்டு எதிரியின் வீட்டிலிருந்த எதிரி கையெழுத்து போட்டு வைத்திருந்த 5 (ஐந்து) காசோலைகள், பணம் மற்றும் சிசிடிவி கேமரா ஆகியவற்றை புகார்தாரர் எடுத்துச்சென்றுவிட்டதாக எதிரி தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், எதிரி தரப்பில் புகார்தாரர் எதிரியை தாக்கியது சம்பந்தமாகவோ, அவரது காசோலைகள் பணம் மற்றும் சிசிடிவி கேமராவை எடுத்துசென்றது சம்பந்தமாகவோ காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை. நீதிமன்றத்தின் மூலமும் எந்த சட்ட நடவடிக்கையும் எதிரியால் புகார்தாரருக்கு எதிராக எடுக்கப்படவில்லை. புகார்தாரரின் சகோதரி விஜயலெட்சுமி என்பவர் எதிரியின் வளர்ப்பு தாய் என்றும், அவர் கேட்டுக்கொண்டதால் புகார் கொடுக்கவில்லை என்றும், எதிரி தரப்பில் கூறப்பட்டுள்ளது. மேற்படி விஜயலெட்சுமி எதிரியின் வளர்ப்பு தாய் என்பதை புகார்தாரர் தரப்பில் மறுத்துள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை நிரூபிக்கும் வகையில் விஜயலெட்சுமியை எதிரி தரப்பில் சாட்சியாக முன்னிலைப்படுத்தவில்லை. எ.ம.சா.2



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.10 13:17:38 +0530

தனது சாட்சியத்தில் **" நான் ரவிராஜனுக்கு போன் செய்து கேட்டபொழுது ஈழவளவன் தன்னை அடித்துவிட்டு தனது வீட்டிலிருந்த சிசிடிவி கேமரா மற்றும் காசோலைகளை எடுத்துசென்றுவிட்டதாக கூறினார்"** என சாட்சியம் அளித்துள்ளார். மேலும், எ.ம.சா.2 அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் **"புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையில் நடந்த பிரச்சனை குறித்து எதிரி சொல்லித்தான் தனக்கு தெரியும் என்றால் சரிதான் "** என சாட்சியம் அளித்துள்ளார். எதிரியிடம் ஓட்டுனராக வேலை பார்க்கும் ரகு என்பவர் எ.ம.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 08.06.2021 அன்று காலை 04.30 மணிக்கு தான் ரவிராஜனுக்கு போன் செய்ததாகவும், அவரது போன் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்ததால் அவரது வீட்டிற்கு சென்று கதவை திறந்து பார்த்தபோது எதிரியின் மாமா ஈழவளவன் எதிரியை அடித்துகொண்டிருந்தார் என்றும், அவருடன் வந்த மற்ற நபர்களும் அவரை அடித்துகொண்டிருந்தார்கள் என்றும், புகார்தாரர் தன்னை கீழே போ என்று விரட்டியதால் தான் கீழே சென்றுவிட்டதாகவும், அவர்கள் சென்றவுடன் எதிரியை தான் மருத்துவமனைக்கு அழைத்ததாகவும், அவர் வேண்டாம் என கூறிவிட்டதாகவும், ஏர்போர்ட்டிற்கு சவாரி செல்வதற்காக எதிரியிடம் டீசலுக்கு பணம் கேட்டபோது எதிரி அவரது காசோலை, பணம், பர்ஸ், போன், சிசிடிவி கேமரா அனைத்தையும் ஈழவளவன் எடுத்துசென்றுவிட்டதாக கூறினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். எ.ம.சா.2 மற்றும் எ.ம.சா.3ன் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், புகார்தாரர் எதிரியின் காசோலை, பணம், சிசிடிவி கேமரா ஆகியவற்றை எடுத்து சென்றதை நேரடியாக பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. எதிரி சொல்லியே அவர்களுக்கு தெரிந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் காசோலை திருப்பப்பட்டது குறித்த அறிவிப்பு எதிரிக்கு அனுப்பப்பட்ட பிறகும் எதிரியால் புகார்தாரருக்கு எதிராக எந்த சட்டநடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, எதிரி எடுத்துள்ள மேற்படி எதிர்வாதமானது புகார்தாரருக்கு ஆதரவாக உள்ள சட்டப்படியான அனுமானத்தை மறுத்தளிக்க போதுமான வகையில் அமையவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. 1 வது எதிரி நிறுவனத்தின் ஒரே உரிமையாளர் 2 வது எதிரியாவார். 1 வது எதிரி நிறுவனத்தின் வங்கி கணக்கிலிருந்து கொடுக்கப்பட்ட காசோலைக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என 2 வது எதிரி தரப்பில் எந்த கட்சியும்



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.10 13:17:47 +0530

எடுக்கப்படவில்லை. எனவே, காசோலையானது 1வது எதிரி நிறுவனத்தின் வங்கி காசோலை கொடுக்கப்பட்டிருந்தாலும் அதன் ஒரே உரிமையாளர் என்ற முறையில் 2 வது எதிரியே அதற்கு பொறுப்பாவார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. இந்த வழக்கில் எதிரி தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட கட்சி பெயரளவில் எடுக்கப்பட்ட கட்சியாகவே உள்ளது என்றும், புகார்தாரரின் வழக்கை பொய்ப்பிக்கும் விதத்தில் எவ்வித சாட்சிகளும் ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்பதும் வழக்காவணங்களிலிருந்து இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எதிரி தனது தரப்பில் எடுக்கப்பட்டுள்ள கட்சியை சரியான முறையில் நிரூபிக்காததாலும், எதிரிமீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி புகார்தாரர் நிரூபித்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எதிரி தரப்பில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 118(a), பிரிவு 139ன் படியான சட்ட அனுமானத்தை எதிரி தரப்பில் மறுக்கவில்லை என்றும், புகார்தாரர் தரப்பில் புகார்தாரரின் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. இவ்வழக்கின் சூழ்நிலை, தன்மை, எதிரியின் வயது ஆகியவற்றை கருத்தில்கொண்டு இந்நீதிமன்றம் குவிமுச பிரிவு 360ன் கீழான பலன்களையோ அல்லது நன்னடத்தை சட்டத்தின் பலன்களையோ பெறத் தகுதியற்றவர் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

22. இறுதியாக, எதிரி மீதான மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் படியான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138ன் கீழ் 6 மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்து உத்தரவிடப்படுகிறது. மேலும், புகார்தாரருக்கு ரூபாய்.7,00,000/- நஷ்ட ஈடாக எதிரி கொடுக்கவேண்டும் என்று குவிமுச பிரிவு 357(3)ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. இந்த தீர்ப்பானது குவிமுச பிரிவு 255(2)ன் கீழ் வழங்கப்படுகிறது. எதிரியை குற்றத்தீர்ப்பிற்கு உள்ளாக்கியுள்ளதால் எதிரிக்கு தீர்ப்பின் நகலை இலவசமாக குவிமுச பிரிவு 363(1)ன் படி வழங்க உத்தரவிடப்படுகிறது.



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.10 13:17:57 +0530

23. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.10 13:18:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

தரங்கம்பாடி.

**அட்டவணை :–**

**<u>புகார்தாரர் தரப்பு சாட்சிகள்</u>:–**

ம.சா.1 – ஈழவளவன் (புகார்தாரர்)

ம.சா.2 – தமிழ்செல்வம்

**<u>புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :–**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | 25.07.2022 தேதியிட்ட கரூர் வைசியா வங்கி தேனாம்பேட்டை கிளைக்கான ரூ.7,00,000/–க்கான 1 வது எதிரியின் சார்பாக 2 வது எதிரியால் வழங்கப்பட்ட காசோலையின் அசல் |
| ம.சா.ஆ.2 | – | 01.10.2022 அன்று காசோலை திருப்பப்பட்டதற்காக இந்தியன் ஓவர்சீஸ் வங்கி எலந்தங்குடி கிளையில் வழங்கப்பட்ட குறிப்பாணை அசல் |
| ம.சா.ஆ.3 | – | 07.10.2022 தேதியிட்ட எதிரிகளுக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பபட்ட அறிவிப்பின் அலுவலக நகல் |
| ம.சா.ஆ.4 | – | 13.10.2022 தேதியிட்ட 2ம் எதிரி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பப்பட்ட உறையுடன் கூடிய அஞ்சல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.5 | – | 1ம் எதிரி 12.10.2022 அன்று அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான Track Consignment |

**புகார்தாரர் தரப்பு சான்று பொருட்கள்** :– இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் :–**
எ.ம.சா.1 – ரவிராஜன் (2ம் எதிரி)
எ.ம.சா.2 – நன்மாறன்
எ.ம.சா.3– ரகு

**எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | – | 10.11.2019 தேதியிட்ட 2ம் எதிரியின் திருமண பத்திரிக்கையின் அசல் |
| எ.ம.சா.ஆ.2 | – | ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் முதல் தகவல் அறிக்கை |

**எதிரிகள் தரப்பு சான்றுபொருட்கள்:–**இல்லை

KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.10 13:18:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.